C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 15 SEPTEMBER 2023 ஆகாரம் : 08

Humility is the fear of the LORD; its wages are riches and honor and life.

-Proverbs 22:4



**தாழ்மைக்கும் கர்த்தருக்கு பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்.**

-நீதிமொழிகள் 22:4

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| 05-SAT<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SATURDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| 05-SAT<br>7.30 PM<br>9.00 PM | 1st & 3rd WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| WED<br>7.30 PM | BIBLE STUDY & PRAYER<br>PARSONAGE<br>CONTACT: THE PRESBYTER |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| THU<br>7.30 PM<br>8.30 PM | 4 TH THURSDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |



# From the Pastor's Desk

அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

**முன்னுரை:**

இயேசுவின் கைகள் காக்க மார்பினில் சாருவேன்(பாமாலை—353) என்ற பாடலை இயற்றியவர் அமெரிக்காவின் நியூயார்க்கில் 1820இல் மார்ச் 24 அன்று ஓர் எளிய குடும்பத்தில் பிறந்த பேனி ஜேன் கிராஸ்பி என்பவர் ஆவார். இவர் தாம் ஆறு வாரக் குழந்தையாக இருந்த போது தவறான மருத்துவச் சிகிச்சையால் தம் கண் பார்வையை நிரந்தரமாக இழந்தவர். நியூயார்க்கில் பார்வை இழந்தோர் பள்ளியில் படித்து அங்கேயே ஆசிரியையுமானவர். ஆண்டவருக்கு உகந்த வாழ்வை வாழ்ந்த பேனி, தன் 40 வயதிற்கு பின்னர் பாடல்கள் எழுதத் தொடங்கினவர். ஒவ்வொரு பாடலையும் முழங்காலில் நின்று, ஜெபித்து, தெய்வீக வழி நடத்துதலின்படி எழுதுவாராம். அப்படி 8000—க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதி உள்ளார். ஒருமுறை புகழ்பெற்ற இசை வல்லுநர் பிதோவான் அவர்கள், பேனியிடம் 'நான் ஒரு ராகத்தை அமைத்திருக்கிறேன்' அதற்கு பாடல் எழுதி தாருங்கள் என்று கேட்க, அப்போது அருகில் இருந்த அறைக்குள் நுழைந்தப் பேனி அவர்கள் அரை மணி நேரத்தில் எழுதி முடித்த பாடல் தான், அவர் எழுதின பாடல்களிலேயே சிறந்ததாக கருதப்பட்டு உலகெங்கும் பாடப்படுகின்ற 'இயேசுவின் கைகள் காக்க' என்ற பாமாலை ஆகும். எனவே சிந்திப்பீர், இயேசுவின் திருப்பாதங்களை நோக்கி ஓடுவீர்.

யூதக் கலாச்சாரத்தில் குடும்பத் தலைவரான ஆண்களுக்கு கடவுள் தரிசனமாகி பிறக்க இருக்கும் குழந்தையை குறித்து கூறுவது வழக்கமாக இருந்த காலகட்டத்தில், பெண்ணாகிய ஆகாருக்கு ஆண்டவர் தரிசனமாகி, அவர் பெற்றெடுக்க இருக்கும் ஆண் குழந்தை பற்றியும் அதின் எதிர்காலம் பற்றியும் கூறுவது (ஆதி 16:7) அவர் பெண்ணுக்கு முக்கியத்துவம் தருவதை சுட்டிக்காட்டுகிறார். ஆகாரிடம் கேட்கப்பட்ட கேள்விகள்:1. ஆகாரே, எங்கே இருந்து வருகின்றாய்? 2. எங்கே போகின்றாய்? (ஆதஇ16:8) என்பவைகளே. ஆகாரின் வாழ்வில் ஏற்பட்ட கடினமானச் சூழலின் விளைவே இந்த ஓட்டம், இந்த ஓட்டத்தில் ஆகாருக்கு

வேதனை இருந்தது, கண்ணீர் இருந்தது, அங்கலாய்ப்பு இருந்தது. எனவே ஆண்டவர் ஆகாரின் அங்கலாய்ப்பிலே இடைப்படுகிறார் (ஆதி 16:11) கேள்விகளை எழுப்புகின்றார். ஆகாரின் கண்ணீர் களிப்பாக மாறுவதற்கு, உன் தலைவியாகிய சாராய் இடம் திரும்பிப் போ என்றும், உன் தலைவியாகிய சாராயின் கையிலே அடங்கி இரு என்றும் ஆண்டவர்(ஆதி 16:9) கூறுகிறார். அப்படிச் சென்று வாழும்போது நீ ஆசீர்வதிக்கப்படுவாய், உன்னை மிகவும் பெருகப் பண்ணுவேன் என்றும் வாக்கு கொடுக்கிறார்.(ஆதி 16:10)

நிறைவாக, பிரியமானவர்களே நமக்கு ஏற்படும் பாடுகளிலே, கலக்கத்திலே, கண்ணீரிலே எங்கே ஓடுகிறோம். அன்று ஆகாரின் அங்கலாய்ப்பைக் கண்ட ஆண்டவர் இன்று நம் அங்கலாய்ப்பைக் காணுகிறார். ஆண்டவர் இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். உலகை நோக்கி ஓடுகின்றோமா? அல்லது ஆண்டவரின் ஆணி பாய்ந்த திருப்பாதங்களை நோக்கி ஓடுகின்றோமா? அவர்தம் திருக்கரங்களில் அடங்கியிருப்போம், ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பார், ஆமென்.

கேள்விகள் தொடரும்......

**நன்றி!**
**ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

**அன்புடன் ஆயர்.**

*Rev. S.Baktha Thiyagarajan*



# தெபொராள்



கிறிஸ்துவுக்குள் அன்பான இறை அன்பர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் ஸ்தோத்திரங்களை தெரிவிக்கிறேன்.

நியாயாதிபதிகள் 4,5 அதிகாரங்கள்) இஸ்ரவேலுக்குள் ராஜாக்கள் இல்லாத காலத்தில் கர்த்தர் நியாயாதிபதிகளைக் கொண்டு அவர்களை வழிநடத்தினார். ஒத்னியேல், ஏகூத், சம்கார் ஆகிய ஆண் நியாயாதிபதிகளுக்குப் பிறகு நான்காவது நியாயாதிபதியாக தெபொராளை கர்த்தர் தெரிவு செய்தார். தெபொராள் தான் ஒரே பெண் நியாயாதிபதி. தெபொராள் ஒரு பெண் நியாயாதிபதியாகவும், தீர்க்கதரிசியாகவும் எழும்பினார். பழைய ஏற்பாட்டு காலத்தில் ஒரு பெண் நியாயாதிபதி எழும்புவது சாதாரண காரியமல்ல. கர்த்தர் இவரை இஸ்ரவேலருக்கு நியாயம் விசாரிக்க ஏற்படுத்தினார்.

**தெபொராளின் சிறப்புகள்:**

இவருக்கு தேவ ஞானம் மிகுதியாக இருந்தது,இவர் நற்பண்பு நிறைந்தவர், கர்த்தரிடம் தன்னை முழுவதும் அர்ப்பணித்தவர், கர்த்தரின் வார்த்தைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி கர்த்தரின் வாயாக இருந்தவர், குடும்பத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளை சரியாக செய்தவர், தைரியம் மிக்கவர், 40 ஆண்டுகள் அமைதியை தக்க வைத்தவர். தெபொராள் என்றால் தேனீ என்று பொருள். தேனீயின் சுறுசுறுப்பு அவரிடத்தில் இருந்தது. அவரைப் போன்று சுறுசுறுப்பான பெண்மணி வேறு எவரும் இல்லை. இவரின் கணவர் லபிதோத், இவர் எப்பிராயீம் மலை தேசமான ராமாவுக்கும் பெத்தேலுக்கும் நடுவே இருக்கிற தெபொராளின் பேரீச்சை மரத்தின் கீழே குடியிருந்தவர், தன்னிடம் வந்த இஸ்ரவேலரின் வழக்குகளை விசாரித்து நீதியாக நியாயம் வழங்கினவர். சிசெராவின் கொடுமையினால் மக்கள் அனைவரும் வந்து தெபொராளிடம் புகார் செய்து அழுதார்கள்.

**எழுந்தார்:**

தெபொராள் தான் வழக்கமாக செய்து வந்த வேலையை விட்டு எழுந்தார், இந்த மாபெரும் பணி தெபொராளின் பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும்

அல்ல, கர்த்தரின் ஆவியினால் மட்டுமே செய்யக்கூடியது. அவள் பெண்ணாக இருந்தாலும் தைரியமாக ஞானமாய் செயல்பட கர்த்தர் அவருக்கு துணை நின்றார். இஸ்ரவேல் மக்களின் முறையீட்டை கேட்ட தெபொராள், நப்தலி நாட்டில் உள்ள பாராக்கை அழைத்து இஸ்ரவேலரை மீட்கும் பொறுப்பையும், சிசெராவை எதிர்த்து போர் செய்யும்படியும் கூறினார். போர் செய்யும் படி பதினாயிரம் பேரோடு தாபோர் மலைக்கு போகும் படி கேட்டுக் கொண்டார். சிசெராவும் அவன் படைகளும் 900 இருப்பு ரதங்களோடு கீசோன் பள்ளத்தாக்கில் காத்திருப்பார்கள் என்பதையும் தெரிவித்தார்.

**சென்றார்:**

அதற்குப் பாராக் நீ என்னோடே வந்தால் போவேன்; நீ என்னோடே வராவிட்டால் நான் போக மாட்டேன் என்றான். (நியா 4:8) தெபொராள் பதவி ஆசை இல்லாதவராய் தலைமை தாங்க விருப்பம் இல்லாமல் இருந்தார். ஆனால், எந்த ஆணும் முன் வராததால் தானே தலைமை ஏற்று அந்த இடத்தை நிரப்புகிறார். பாராக்கிடம் வெற்றியின் மேன்மை உனக்கு இல்லை. கர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரீயின் கைக்கு ஒப்புக் கொடுப்பார் என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தார், பின் பாராக்கோடு போருக்கு சென்றாள். கர்த்தர் சிசெராவின் படையை இஸ்ரவேலரின் படையினால் மடங்கடிக்கச் செய்தார். சிசெரா மட்டும் இரதத்தை விட்டிறங்கி தப்பி ஓடினான், ஏபேரின் மனைவியாகிய யாகேலிடம் தஞ்சம் புகுந்தான். சிசெரா நல்ல நித்திரையில் இருக்கும் போது யாகேல் ஒரு கூடார ஆணியால் சிசெராவின் நெற்றியில் வைத்து அடித்து பூமியில் இறக்கினாள், சிசெரா செத்துப் போனான்.

**வென்றார்:**

இவ்வாறு கர்த்தரின் வார்த்தைப்படி சிசெராவை ஒரு பெண்ணின் கையில் ஒப்புக்கொடுத்தார். கர்த்தரால் கூடாதது ஒன்றுமில்லை பாராக் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிக்காததால் அந்த வெற்றி யாகேல் மூலம் கர்த்தர் எளிதாக நடத்தினார். கர்த்தருடைய பார்வைக்கு ஆண், பெண் அனைவரும் சமம். நாமும் கூட தெபொராளின் நல்ல குணங்களை பின்பற்றுவோம், கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார், ஆமென்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக

ஆண்டவரின் இறைப் பணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs . P . Velanganni*

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரனே! சகோதரியே! உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் கர்த்தர்தாமே இந்த மாதம் முழுவதும் நம்மோடு கூட இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக இந்த மாதத்தில் வாக்குதத்தம்

"உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால்,என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்"

துக்கம் நம்முடைய வாழ்க்கையில் நம்பிக்கையின்மைக்கு வழிநடத்துகிறது. துக்கம் நமக்குள் சோர்வு, தளர்வை உண்டுப்பண்ணுகிறது. வாழ்க்கையில் மனிதனுக்கு சஞ்சலமும், வேதனையும் துக்கமும் பங்காய் நியமிக்கப்பட்டிருகிறது. இந்த சங்கீதக்காரனும் இவ்விதமான துக்கத்தில் கடந்து போயிருக்கிறான். இன்றைக்கு அநேகர் துக்கம் என்றால் அதிலேயே முழுகிவிடுகிறார்கள். முற்றிலும் நம்பிக்கையின்மைக்குள் போய் விடுகிறார்கள். அதுவல்ல கிறிஸ்தவ வாழ்க்கையென்பது. துக்கம் வரலாம் சோதனைகள் வரலாம். ஆனால் அதன் மத்தியில் தேவனுடைய துணையோடு கடந்து செல்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. என்றும் துக்கமில்லாத ஒரு தேசத்தை நோக்கிப் போகிற பிரயாணத்தில் இருப்பதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. 'இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை'. (வெளி 21 : 4)

ஆனால், இவ்விதமான வேளையில் சங்கீதக்காரன் நல்ல முன்மாதிரியை வைத்திருக்கிறான் பாருங்கள். வேதத்தின் பக்கமாகத் திரும்பினான். வேதம் தேவனுடைய வார்த்தை என்பதை மறவாதே. இது ஒரு கிறிஸ்தவனுக்கு இந்த வனாந்திரப் பாதையில் வழிக்காட்டியாக , தீபமாக




கொடுக்கப்பட்டிருக்கிறது. துக்கத்தின் பாதை இருண்ட பாதை அதில் நடக்க உனக்கு வெளிச்சம் தேவை அதை நீ தேவனுடைய வார்த்தையின் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும். அதற்காகவே தேவன் நமக்கு வேதத்தைக் கொடுத்திருக்கிறார். ஒரு கிறிஸ்தவனுக்குத் தேவையான அனைத்தையும் தேவன் தம்முடைய வார்த்தையில் கொடுத்திருக்கிறார். தேவ ஆவியானவர் உன்னுடைய சூழ்நிலைக்கு ஏற்றவண்ணமாக தமது வார்த்தையிலிருந்து உனக்குக் கொடுக்கிறார். சங்கீதக்காரன் தன்னுடைய துக்கத்திலே வேதம் மனமகிழ்ச்சியாயிருக்கிறது என்று சொல்லுகிறார் அன்பானவர்களே! துக்கத்தில் அமிழ்ந்துபோகாமல் அதன் மத்தியில் மனமகிழ்ச்சியாய் கடந்துபோக சங்கீதக்காரனுக்கு வேதம் உதவினால் ,உங்களுக்கும் வேதம் அவ்விதமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே வேதத்தை வாசிப்போம் வேதனையை மறப்போம்.

கர்த்தர் உங்களை தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக .ஆமென்., ஆமென்

ARTICLE BY

MEN'S FELLOWSHIP



# நாவு

Article by SIS. MONA PREM
WOMEN'S FELLOWSHIP



**"அப்படியே, நாவானதும்சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது"**

யாக்கோபு 3:5

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நாவை பற்றி அநேக இடங்களில் வேதத்தில் காண முடிகிறது. ஒரு சிறிய உதாரணத்தின் வழியாக விவரிக்க விரும்புகிறேன்.**

**பேரரசன் ஒருவனிடம் வலிமைமிக்க யானை ஒன்று இருந்தது. போர்க்களம் செல்லும் போதெல்லாம் அதன் உடல் முழுவதும் வாட்கள் நிறைந்த கவசங்களால் மூடப்பட்டிருக்கும். அதன் வாலிலும் இரும்பு குண்டு இணைக்கப்பட்டிருக்கும். போர் சமயங்களில் அதனுடைய துதிக்கையில் அடிபடாமல் இருக்க, துதிக்கையை நன்றாக சுற்றி வைத்துக் கொள்ள பழக்கி இருந்தனர். ஒரு நாள் போரின் சமயத்தில் அதன் அங்கங்களில் இருந்த ஆயுதம் ஒன்று கீழே விழுந்ததும், அதனை எடுக்க அதுவரை வளைத்து வைத்திருந்த துதிக்கையை நீட்டியது யானை. உடனடியாக பாகன் எதிரிகள் துதிக்கையில் ஈட்டியை எறிவதற்குள் களத்தில் இருந்து யானையை விரைவாக வெளியேற்றிக் கொண்டு வந்தான். பின்பு நடந்தவற்றை அரசனிடம் கூறி இந்த யானை இனி போருக்கு பயன்படாது என்றான். அரசனும் அந்த யானையை போரில் பயன்படுத்த வேண்டாம் என்று கூறி விட்டான். பிரியமானவர்களே, மனிதர்கள் தங்கள் நாவை அடக்கும் வரையில்தான் நன்மை அடைவார்கள். அவசியம் இல்லாத இடங்களில் நமது நாவை கட்டுப்படுத்த வேண்டும்.**

**சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற் போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான் – நீதிமொழிகள்10:19**

**ஆம் கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நாக்கின் நீளம் மூன்று அங்குலம் தான். ஆனால் அது அனைத்தையும் செய்ய வல்லது. வெறுப்பிலும், கோபத்திலும், மகிழ்ச்சியிலும் கூட வார்த்தைகளை அளந்து பேசலாமே!!**

WOMEN'S Fellowship



# ஜெபிக்கிறவர்கள் தேவை


நெகேமியாவின் இருதய நிலையை நாம் நோக்கி பார்க்கும்பொழுது நாம் நம்மைக் குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சூசான் அரண்மனையில் சௌகரியமாக வாழ்ந்து, நெகேமியா தன்னுடைய காரியத்தில் மிகுந்த சந்தோஷமாக இருந்திருக்கலாம். ஆனால் அவன் ஆண்டவருடைய காரியங்களைக் குறித்து எவ்வளவாக பாரமுள்ள மனிதனாக இருந்தான் என்பதைக் குறித்து இந்த வசனம் நமக்கு தெளிவாக உணர்த்துகிறது. நாம் இன்றைக்கு நம்மை சுற்றி இருக்கும்படியான மக்களின் அவல நிலையை எண்ணிப் பார்த்து நெகேமியாவைப் போல இருதய சிந்தை உள்ளவர்களாக இருக்கிறோமா? அவன் எருசலேமின் அலங்கம் இடிபட்ட நிலையையும், அதன் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்பதையும் கேட்ட போது அவனுடைய துக்கம் மேலிட்டது. அவன் அழுது

> **"இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி"**
>
> —நெகேமியா 1:4

அதற்காக சில நாளாய் துக்கித்தான் என்று பார்க்கிறோம். அவனுடைய துக்கம் என்பது வெறுமையாக உணர்ச்சிபூர்வமான விதத்தில் மேலோட்டமானதாக அல்ல. அவனுடைய துக்கம் ஆத்மாவிலிருந்து வருகிற ஒன்றாய் காணப்பட்டது. அவனுடைய துக்கமானது தேவன் பேரில் வைத்திருந்த அன்பைக் காண்பிக்கிறது.

அவருடைய மக்கள் படுகிற பாடுகளை அவன் பார்த்த பொழுது அவனுடைய இருதயம் அதிகமாய் வேதனைப்பட்டது. அதோடு கூட அவன் நின்றுவிடவில்லை. அதற்காக அவன் தேவனை நோக்கி


ஜெபித்தான். இன்றைக்கு ஆண்டவருடைய காரியமாய் ஜெபிக்கிறவர்கள் தேவை. ஆண்டவருடைய காரியமாய் பாரத்தோடு உண்மையாய் ஜெபிக்கிற மக்களை தேவன் எதிர்பார்க்கிறார். திறப்பில் நிற்கும்படி அவர்களைக் கர்த்தர் எதிர்பார்க்கிறார். நாம் இந்த காலத்தின் கிறிஸ்தவ மக்களின் நிலை குறித்து எண்ணிப் பார்க்கும் பொழுது, மெய்யாலும் பாரத்தோடும் துக்கத்தோடும் ஜெபிக்கிறவர்களாக இருக்கவேண்டும். திறப்பில் நிற்க நாம் பாரம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். நாம் சுயநலவாதிகளாக நம்முடைய சொந்தக் காரியங்களை மட்டுமே கருத்தில்கொண்டு வாழ்பவர்களாக இருக்கக்கூடாது. ஆண்டவருடைய இராஜ்யத்தின் காரியங்களைக் குறித்து நாம் பாரப்பட வேண்டும்.




ARTICLE BY

YOUTH FELLOWSHIP

# SENIOR ARTICLE




**Class Teacher -- Mr. Stanley**





## How it Works




**STEP 1** DONATE IN THIS BOX

**STEP 2** COLLECT & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE



THE CBS MINISTRY KIDS TOGETHER THEY ARE SUPPORTING, EDUCATING AND CHANGING ONE KID'S LIFE (Ms. Rithika/Chennai).

COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO SAVE MONEY AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION & FOR HER BAISC NEEDS.

# AUGUST WINNERS

## Find the way

- Janet Thirsha
- Joshana
- Ajin Shah
- Regan shan

## Kids Colouring

- Janet Zaharina
- Janet Thirsha
- Joshana
- Reagan shan.

WELL DONE!

## Word Search

- Janet Thirsha
- Joshana
- Ajin Shah

## Cross Word

- Janet Thirsha
- Regan shan
- Sherin Shah

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month – Year

**To Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# NUMBERS: 1-12

## எண்ணாகமம்: 1–12

SEPTEMBER '23 - QUESTIONS

1. இஸ்ரவேலில் யுத்தத்திற்கு ப் புறப்பட தக்கவர்கள் எத்தனை பேர்?
2. மனாசே சந்ததிக்குச் சேனாபதி யார்?
3. எலியாசாப்பின் தகப்பன் பெயர் என்ன?
4. கெர்சோன் புத்திரரின் வம்சத்தில் ஆசரிப்பு கூடாரத்தில் பணிவிடை செய்யத்தக்கவர்கள் எத்தனை பேர்?
5. சாப கரணமான ஜலம் என்ன செய்யும்?
6. நசரேயனுக்குரிய விரத நாட்கள் நிறைவேறினதும் சமாதான பலியாக என்ன செலுத்த வேண்டும்?
7. பாகியேலின் தகப்பன் யார்?
8. ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையை செய்பவர் எந்த வயது உடையவர்?
9. ஒருவன் பஸ்காவை ஆசரிக்காமல் போனால் என்ன செய்யப்படுவான்?
10. ரெகுவேலின் குமாரன் பெயர் என்ன?
11. காடை தரையின் மேல் எவ்வளவு உயரம் விழுந்து கிடந்தது?
12. என் வீட்டில் எங்கும் உண்மை உள்ளவர்-யார் அவர்?

QUIZ TIME

### ஆகஸ்ட்- 2023-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. லேவி: 14:38 | 2. லேவி: 15:12 | 3. லேவி: 16:29 | 4. லேவி: 17:11 | 5. லேவி: 18:21
6. லேவி: 19:18 | 7. லேவி: 20:27 | 8. லேவி: 21:12 | 9. லேவி: 22:29 | 10. லேவி: 23:17
11. லேவி: 24:11 12. லேவி: 25:10-11 | 13. லேவி: 26:26 | 14. லேவி: 27:25


திருமதி. பானு அருண்குமார், திருமதி ரோஸ்லின் தமிழ்ச்செல்வி, திருமதி. ஜெயின் அற்புதக்கனி,
திருமதி. ரேனா ஜோஸ் செல்வகுமார், திருமதி. பிப்லின் நெல்சன், செல்வி. அஜின்ஷா

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.
மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம்.
தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.
Your Name / Bible Quiz / SEPTEMBER'23 / Send to: csitcalain@gmail.com
056 766 8348

Name:

Date:

# Kids Coloring




# Find the Way

Name : ..............................................................

# JONAH, NINEVEH AND THE BIG FISH

Help Jonah on his way to Ninevah.



# WORD SEARCH

Find the words listed below

## A Mustard Seed Faith




He replied, "If you have faith as small as a mustard seed, you can say to this mulberry tree, 'Be uprooted and planted in the sea,' and it will obey you." Luke 17:6 (NIV)

The puzzle is based on Luke 17:5-10 (NIV).

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | G | T | P | M | P | W | O | K | U | Y | P | T | U | B |
| M | G | E | Q | K | U | W | L | P | D | I | P | A | S | S |
| W | U | W | I | X | Y | S | R | F | R | U | T | E | U | E |
| B | P | L | O | P | Z | W | T | G | I | E | T | E | P | E |
| U | P | V | B | B | L | S | E | A | C | K | P | Y | P | D |
| I | G | B | E | E | F | A | I | T | R | E | E | V | E | F |
| A | N | J | Y | I | R | P | N | B | O | D | S | W | R | G |
| P | U | C | G | A | T | R | X | T | S | P | H | Z | I | R |
| O | P | P | R | A | H | O | Y | R | E | P | L | I | E | D |
| S | R | R | E | E | A | S | K | U | A | D | I | D | B | F |
| T | O | E | B | E | A | N | M | F | I | L | O | R | D | M |
| L | O | P | T | P | X | S | K | A | A | E | X | O | C | O |
| E | T | A | R | W | T | B | E | Y | L | I | W | L | J | F |
| S | E | R | S | E | R | V | A | N | T | L | T | O | A | O |
| X | D | E | Z | S | A | K | D | R | I | N | K | H | D | K |

| | | | | |
|---|---|---|---|---|
| DRINK | SEA | DUTY | OBEY | APOSTLES |
| FAITH | EAT | INCREASE | PLANTED | SMALL |
| SERVANT | LORD | UPROOTED | MUSTARD | PREPARE |
| SEED | REPLIED | TREE | MULBERRY | SUPPER |

Name : ..............................................................

**CROSS WORDS**


Name : ..............................................................................

# Faith Is the Key

EXERCISING OUR FAITH

When Jesus heard this, he was amazed at him, and turning to the crowd following him, he said, “I tell you, I have not found such great faith even in Israel.” Then the men who had been sent returned to the house and found the servant well. Luke 7:9-10 (NIV)

Puzzle is based on Luke 7:1-10




ACROSS

1. People that you know well and regard with affection
3. To be physically ill
6. To deserve something
7. To be overwhelmed, surprised, or shocked

DOWN

1. A strong belief in the power of God
2. A person working in the service of another
4. To cure or make healthy again
5. The Son of God

# SEPTEMBER - 2023

| | |
|---|---|
| 01-SEP | Mastr. Allen Riyo S/o Mr. Robert Wilson.T |
| 02-SEP | Mrs. Shafeena |
| 04-SEP | Mr. Celin Jose |
| 04-SEP | Mrs. Jamuna Rani |
| 05-SEP | Mrs. J.N.Basil Shallu |
| 05-SEP | Mrs. K.V.Ashmitha Lifin Raj |
| 08-SEP | Ms. Divya Dharshini |
| 09-SEP | Mr. Vinith J.Samuel |
| 10-SEP | Mrs. R.Muneeswari |
| 10-SEP | Mrs. Shiby Angel |
| 10-SEP | Mr. Asphin Raj.M |
| 11-SEP | Miss. Jemima Ashni D/o Mr. Suresh Rajan |
| 11-SEP | Mastr. Samuel Hebron Stephen S/o Mr. Stephen |
| 12-SEP | Mrs. Pamela Jennifer.J.P |
| 13-SEP | Mr. Berlin Jose.I |
| 17-SEP | Mr. Nelson Sopitha Raj |
| 18-SEP | Mrs. P.Hemalatha |
| 19-SEP | Ms. Suji kumar K.S |

*Wish you many more happy returns of the day God bless you all*

# SEPTEMBER - 2023

| | |
|---|---|
| 20-SEP | Miss. Jamie Shino Mathew D/o Mr. Shino P Mathew |
| 21-SEP | Mastr. S.Jesvin Bose S/o Mr. Selva Kumar |
| 22-SEP | Baby. Janet Thirza D/o Mr. Arunkumar.K |
| 23-SEP | Ms. Sharon S. Rao |
| 23-SEP | Ms. Shivi Mol Shalin |
| 24-SEP | Mr. Danesh Yogendra Rao |
| 27-SEP | Ms. Pragathi |
| 27-SEP | Dr.Godwin Devadhas Packiaraj |
| 28-SEP | Mrs. S.Divya Sherrin |
| 29-SEP | Mr. Sugitha Isravel |
| 30-SEP | Mastr. Immanual S/o Mr. Suresh Babu |

*"The Lord bless you and keep you; the Lord make his face to shine upon you and be gracious to you; the Lord lift up his countenance upon you and give you peace."*

*Wishing you a lifetime of love, laughter, and happiness on your Anniversary*

# SEPTETMBER *Wedding* ANNIVERSARY

**02-SEP**
Mr. D.Jeyakumar
&
Mrs. J.Vivilin Juni

**03-SEP**
Mr. Chandrasekar.P
&
Mrs. Harika Chandrasekar

**05-SEP**
Mr. Praveen Paul
&
Mrs. Sugitha Isravel

**07-SEP**
Mr. Suresh Rajan
&
Mrs. Anitha Rajan

**09-SEP**
Mr. Danesh Yogendra Rao
&
Mrs. Annie Selvi Danesh

**11-SEP**
Mr. Vinith J.Samuel
&
Mrs. M.Aishwariya

**15-SEP**
Mr. Prince Emmanuvel
&
Mrs. Josephine Nimshi

**16-SEP**
Mr. D.Rajavel
&
Mrs. Jein Arputhakani

**16-SEP**
Mr. Stalin Jose .A
&
Mrs. Babi Kutti .J

**16-SEP**
Rev.S.Baktha Thiyagarajan
&
Mrs. P. Velanganni

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்




"Commit to the LORD whatever you do, and he will establish your plans."

-Proverbs 16:3

உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்.

—நீதிமொழிகள் 16:3

# OUR NEW COMMITTEE


Rev. S.Baktha Thiyagarajan
Presbyter


Havin Heba
Secretary


Santhosh Kumar
Vice President


Franklin Christopher
Treasurer


Basil Shallu
Accountant


Verslin Benny
Warden


Prem Jenifer
EC Member


Enock Prabhakaran
EC Member




**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**